# காஞ்சிபுராணம் என்னும் வரதராஜன் வைபவக்கும்பி பதிப்பு 1933

O-185
N33
85730
1933

ஸ்ரீ:

# ஸ்ரீகாஞ்சிபுராணம் என்னும் வரதராஜன் வைபவக் கும்மி.

12 MAY 1933



சந்திரபானு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1933 [விலை 2-அணா.

ஸ்ரீ:.

ஸ்ரீ பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

## ஸ்ரீகாஞ்சி புராணம் என்னும்

# வரதராஜன் வைபவக் கும்மி.

---

12 MAY 1933

இஃது.

காஞ்சீபுரம்,

T. T. பாஷ்யம் ஐயங்காரால்,

எழுதப்பட்டு,

புரொப்ரைடர்

N. அண்ணாமலை நாடார்,

அவர்களால்

சந்திரபானு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பிரைட்] 1933 [விலை 2-அணா.

O-48S1M852,S
N33

## சிறப்புரை.

சீரும் சிறப்பும் வாய்ந்த இப்பரதகண்டத்தில் என்னாட்டினும் நன்றுடைன விளங்கும் தொண்டை வளநாட்டில் காஞ்சீபுரம் என்னும் நகரமானது அயோத்தி, மதுரை, மாயை, அவந்தி, காசி, துவாரை, இப்புண்ணிய பூமிகளை விடச்சிறந்ததென விளங்கும்.

இத்தகைய காஞ்சிமா நகரத்தின்கண் அந்தணர் மரபிற்றோன்றி ஐம்பெருனூலும் அமைதரக்கற்று வேதவிதியகலாது சன்மார்க்கத்தையே நன்மார்க்கமெனும் கடைப்பிடித்த உத்தம புருஷனாகிய ஸ்ரீமான் T. T. பாஷியம் ஐயங்கார் அவர்களால் இயற்றிய காஞ்சிபுராணமென்னும் வாதராஜன் வைபவக்கும்மியானது சொல் நயம்பொருள் நயம் முதலிய நவரசங்கள் அடங்கிய பக்தி நூலாயிருப்பதால் இந்நூல் சிறுவர், சிறுமி முதல் சகலஜனங்கட்கும் இன்றியமையாத நன்மையை தரக்கூடியதென்பது சொல்லாமலே விளங்கும். இந்நூலாசிரியர் இதுபோன்ற நூல்களெழுதி யாவர்க்கும் பயன்படுமாறு வெளியிடல் நலம்.

கு. சோமசுந்தர நாடார்,
கணவன் மனைவி கற்புவிளக்கம் நூலாசிரியர்,
தஞ்சை ஜில்லா, பிறையாறு.

85730



ஸ்ரீ:

ஸ்ரீபேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீ காஞ்சீபுராண மென்னும்
# வரதராஜன் வைபவக்கும்மி

### ஸரஸ்வதி துதி.

(வாரிஜாஸனன் ராணியே மெட்டு)

வாணியே என்தன் வாக்கு தன்னிலே
வந்தருள்வாயே—வேணியே,

நாணியே உன்தன் இணையினை
நம்பியே நான் அடைந்தேனே
பேணியே வரதன் மகிமையை
பாடவே அருள்வாய் நீயே (வாணி)

### பெருமாள் துதி

(நாதவிந்துகள் மெட்டு)

1 பாலகிருஷ்ண கோபாலா நமோ நமோ
ஞாலமுண்ட பூலோலா நமோ நமோ
நீலமேக சியாமளா நமோ நமோ
பரமனே.

2 பூதபஞ்ச ஸ்வரூபா நமோ நமோ
வேதமந்த்ர ப்ரதாபா நமோ நமோ
கீதபஞ்ச ச்ருணீதா நமோ நமோ
நரஸிம்மா.

3 பக்த்த நித்த வத்ஸலா நமோ நமோ
பக்தி நித்யஸ்வரூபா நமோ நமோ
அத்தியங்கிரி யாளா நமோ நமோ
வரதனே.

4 அளிக்கும் புத்தி அரூபா — நமோ நமோ
களிக்கும் சித்தஸ்வரூபா — நமோ நமோ
விளக்கொளிம் பெருமானே — நமோ நமோ
பெருமானே.

## பெருந்தேவியார் துதி.

(ஏதடீ நீங்கள் இங்குவந்து மெட்டு)

1 வேண்டியே துதித்தேனே உம்மையே
பெருந்தேவியே என் அம்மணியே (வேண்டியே)

2 வரதன் வைபவமதை வையகத்தில் யான்பாட
துரிதமாய் பிழையின்றி என் நாவினில் நீ நாட
பரிந்துமே கிருபை செய்வாய்பெருந்தேவியே நீயே. (வேண்)

3 சேனை முதலி, சடகோபன், நாதமுனி,
யமுனைத்துறைவன் எதிராசன் கூரேசன்,
பட்டன், உலகநாதன், மணவாளன், அடிபோற்றி. (வேண்)

## அவையடக்கம்.

(கோதைக்கல்யாணமதை மெட்டு)

பேரருளாளன் பிரபாவமதையான்பாட
சீரார் சடகோபன் பாதமலர் யான்பணிந்தே
ஏராரும் எதிராஜன் இணையடியை யான் துதித்தே.
மறையாளன் மணவாளன் மலரடியிறைஞ்சுவேனே.

## நூல்.

## தேவராஜன் மஹிமை.

(செந்தமிழ் நாடென்னும் மெட்டு)

1 வையகந்தன்னிலே வரதன் வைபவ
மதையே பாட யாரால் முடியும்
தையலே தெரிந்தவரையில் பாடுறேன்
பண்புடன் கேளடி பெண்மயிலே.



2 பத்தி நிறைந்த பதின்மர்களுமே
பாடமுடியாமல் விடுத்தாராம்
எத்திசையிலும் இணையில்லை என்றே
எண்ணி ஏங்கியே துதித்தாராம்

3 அன்புடனே தை ஹஸ்தமதிலே
ஆழ்வாரே ஆழ்வானுவதரித்தே
தென்புடனவரும் திரு நம்பியுமாய்
திவ்வியமாகத் துதித்தாராம்.

4 வேதாந்த நாதனும் வந்தவதரித்தே
வேண்டிய துதிகள் செய்தாராம்
விசதவாக்கு சிகாமணியுமே
வாஞ்சையாய் மங்களமளித்தாராம்.

5 பொங்குமறைகளும் பாடிடுமாம்—எங்கும்
பூமங்கையாளும் நாடிடுமாம்
சங்கரன் ஐங்கரன் நான்முக னிந்திரன்
தேடிடும் சீரதைக்கேளடியே.

பிரமதேவர் ஸ்ரீமந்நாராயணனைக்கண்டு சேவிக்க வேணும் என்று யோசனைசெய்ய, ஆகாயவாணி ஆயிரம் அச்வமேதயாகம் செய்தால் காணலாமென்ன; ஐயோ! ஒரு அச்வமேதம் செய்வதே கஷ்டமாச்சுதே; ஆயிரம் செய்வது எப்படி முடியுமென்றுக்லேசிக்க, உடனே ஆகாயவாணியும் அப்படியானால் அத்திகிரியிருக்கும் ஸத்ய வ்ருத க்ஷேத்திரத்தில் செய்யும் ஒன்றும் ஆயிரமாகும் ஆகையால், அங்கேபோய் செய்யுமென்ன, அப்படியே செய்ய யத்தனித்தல்.

(செந்தமிழ் நாடென்னும் மெட்டு)

1 நாரணனைக்காணவேண்டியே நான்முகன்
காரணந்தெரியாமல் துதிக்க
ஆகாயவாணியும் அவ்விடந்தன்னிலே
ஆயிரம் யாகமும் செய்யுமென்றார்.

2 ஆயிரம் யாகமும் செய்யுமென்றால் அது
யாரால் இப்பொழுது ஆகுமென்ன
ஆனால் அத்திகிரியிருக்கும்—சத்திய
வ்ருதக்ஷேத்திரந்தன்னிலே

3 பாலாற்றின் வடகரையிலே
பண்புள்ள மலையினுச்சியிலே—செய்யும்
ஒன்றும் ஆயிரமாகுமே—அங்குமே
நீர் சென்று செய்யுமென்றார்.

(ராமாவதாரனடி மெட்டு)

1 அதுகேட்ட நான்முகனும்
ஆனந்த முடன் தானும்
அத்திகிரியில் சென்று—அன்புடன்
ஆரம்பம் செய்தான் யாகம்.

2 அனந்த ஸாஸுதன்னில்
கனத்த மனஸுடனே
நினைத்தே நாரணை—நான்முகன்
ஸ்நானம் செய்தானுடனே.

(யாகத்திற்கு எல்லா தேவ, ரிஷி, அஸுரர்களும் வந்திருந்தார்கள். யாகாரம்பத்தில் தேவேந்திரனுக்கு அக்கிரதாம்பூலம் கொடுக்கவே அஸுரர்கள் கோபம் மூண்டு யாகத்தை அழிக்க எண்ணி சரஸ்வதியினிடம் ஏகுதல்)

(கோதைக்கல்யாணமதை மெட்டு)

ஆரம்பம் தன்னிலே — அக்கிரதாம்பூலமெடுத்தே
அஸுரர்க்கு கொடுக்காமல் — அமரர்க்குமே ஈந்தார்.
அதுகண்ட அஸுரரும் — அதிககோபமாய் எழுந்தே
சதிசெய்ய எண்ணமிட்டே — சரஸ்வதியினிடம் சென்றார்.

அஸுரர் சரஸ்வதியை நோக்கித் தோத்தரித்தல்.

(புள்ளிக்கலபமயில் பாகன் மெட்டு)

1 தாயே சரஸ்வதியே உம்மை
நம்பியே வந்தோம் காருமெம்மை
அம்மையே உண்மையாக
வந்தோமே—அனுகி ஏக
யாமே உம்மை தாமே (தாயே)



2 வேதமுதல்வியே—உம்மை
வேண்டி துதித்தோமே—உண்மை
கீதமது தன்னால்—மாதே துதித்தோமே
கோதே இப் போதே. (தாயே)

3 இன்றே திருவுருவே—நீயே
நன்றே அருள் செய்குவாயே
சென்றே அத்திகிரி கொன்றே
யாகந்தன்னை வென்றே மிகநன்றே (தாயே)

சரஸ்வதி ப்ரஸன்னமாக அஸுராள் சமாசாரம் சொல்லுதல்

(சொக்கர் அலங்கார மெட்டு)

1 அம்மணியே அடியேன்கள்
தெண்டனிட்டு செய்துசொல்லும்
விண்ணப்பமதையே
திண்ணமதாய் கேட்டிடுவீர்

2 உம்முடைய பர்த்தாவும்
உத்திரவேதியிலே
அத்திகிரியிலே
ஆரம்பித்தார் அச்வமேதம்.

3 அவ்விடமே உம்மைதானே
காணாமல் மிகவருந்தி
அடாமல் இவ்விதமும்
செய்யலாமோ என்றுசொல்ல

4 உம்மைப்போல் ஓர் உருவம்
செய்துவைத்தே ஆரம்பித்தார்
ஆகையால் அடியேன்கள்
அதைவிட்டே ஓடிவந்தோம்

அஸுரர் வார்த்தையைக்கேட்டு சரஸ்வதி யாகத்தை அழிக்கவருதல்.

(மானாமதுரையிலே மெட்டு)

1 என்றதை கேட்டவுடன்
எழுந்தேமிக கோபமுடன்
புரப்பட்டாள் சரஸ்வதியும்
ப்ரவாக ரூபமுடன்

2 இருண்டுருண்டமேகமுடன்
இடிபடைவேகமுடன்
அடியோடு அழித்திடவே
அப்பொழுதே ஓடிவந்தாள்.

3 எங்கும் இருள்மூண்டதே
ஓங்கும் ரவியும் மாண்டதே
தாண்டவம் செய்யுமந்த
சரஸ்வதியும் மீண்டதே.

சரஸ்வதி வேகவதி ரூபமாய் இடியும் படையுமாய் வருவதைக் கண்ட பிரும்மா முதலியவர் யாகம் அழிந்து விடுமோ என்று பயப்பட நாரதர் சொல்படி பகவானைத்தோத்தரித்தல்.

(ராமாவதாரனடி மெட்டு)

கண்டாரே தேவர்முதல்
நாரதன் நான்முகனும்

விண்டாரே என்னசெய்வ—தென்றுமே
கொண்டாரே மனக்கிலேசம்.

என்றதும் நாரதரும்
ஒன்றும் அஞ்சாதீர் நீரும்

என்றுமே எல்லோருமாய்—வரதனை
போற்றினார் அப்பொழுதே.

(சொக்கரலங்கார மெட்டு)

என்ற உடன் நாரதரும்
இப்பொழுதே நீர்தானும்
பண்புடனே பரமனையே
பாடி துதியுமென்றார்.
பிரமனுமே பக்தியுடன்
சிரமதையே தானுயர்த்தி
கரமதையே தான் குவித்து
பரமனையே பணிந்து நின்றார்



(காட்சி கண்காட்சியே மெட்டு)

1 கார்த்தருள் வீரே

கண்ணு எந்தனை நீரே (கார்த்தருள்)

2 பார்த்தே எங்கள் பரிதாபந்தன்னையே நீர்—தீர்ப்பீரே
சீர்த்தவாணியின் வேகமதிலிருந்து—கார்ப்பீரே
வேர்த்த எங்கள் குறைதன்னை இப்போதே போக்குவீரே.

வாடியே அலைகின்றோமே யாங்கள்—உம்மை
தேடியேமனங்குலைந்தோம் நாங்கள்—எம்மை
நாடியே வரவேண்டும் நீங்கள்

உம்மையே நாங்கள்—தேடி
செம்மையாய் யாங்கள்—பாடி
உண்மையாய் தேடி—னோமே (கார்த்த)

3 ஆனைக்கன்றருள்செய்த அன்பனே—நீருமே
எனக்கும் இந்தவேளை யருள்செய்ய—வாருமே
மனக்குறையால் வாடும் எந்தனைக்கண்—பாருமே

ஏனையா இந்த சோதனையும்—என்னைக்
காராவிடில் இதும் உந்தனையும்—சொன்னேன்
போகாது பார் உள்ளதனையும்

உனக்கே—அவதூறு
எந்தனை இப்போ—காரு
சிந்தனை செய்தே—பாரு (கார்த்த)

எல்லோரும் தோத்தரிக்க பகவான் வேகவதியின் குறுக்கே அணையாக நிர்வாணமாய் எதோத்காரியாக திருவவதரித்தல்.

(சொக்கரலங்கார மெட்டு)

இவ்விதமே அன்னவரும் இன்புடனே தோத்தரிக்க
அன்புடனே எம்பெருமான் தென்புடனே ஓடிவந்தார்
பண்புடனே ஓடி அவர் பாயும் வேகவதியின்
தன்மையின் எதிராகவும் கன்னியமாய் பள்ளிகொண்டார்.

யதோத்காரியைக்கண்ட ஸரஸ்வதி வெட்கித்து பூமியுள்ளே பாய்ந்து மறைந்து பிறகு பெருமாள் முன்வந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டல்.

(வந்தார் வேகமாய் கண்ணன் மெட்டு)

1 கண்டாள் சரஸ்வதியும்—அப்பொழுதே
கொண்டாள் மனஸ்கவியும்

கண்டாள் சரஸ்வதியும் கொண்டாள் மனஸ்கவிதம்
விண்டவள் அப்பொழுதே கண்டே மறைந்துபோனாள் (கண்)

2 பண்டே பிரிந்துமவள் கொண்டே ஜல ரூபமாய்
கண்டே அடங்கினாளே தண்தடாகமதிலே (கண்)

3 பின்பவள் பெண்ணுருவம் கொண்டே பெருமாள் முன்னே
இன்பமாய் வந்து அவள் தண்டனிட்டே சொல்லுவாள் (கண்)

(சிங்காரம் செய்துகொள்வாய் மெட்டு)

1 கார்த்தருள் என்னை ஐயா
காருண்ய ரூபா மெய்யா (கார்த்த)

2 தீராப்பிழை செய்தேனே
வீரா என்னை பொறுப்பீர்
காராய் என்னை நீருமே (கார்த்த)

3 பூதஸ்வரூபா நீயே
வேதப்பிரதாபா நீயே
சோதாப்ரீணிதா நீயே (கார்த்த)

4 மூலமென்று அழைத்த
யானை தன்னைக்காத்தோனே
சீலா உன்னைப்பணிந்தேன் (கார்த்த)

5 யதோத்தகாரியே உன்னை
யதார்த்தமாக நம்பினேன்
க்ருதார்த்தளாகச்செய்யுமே (கார்த்த)

---



பிரமதேவன் யாகத்திற்கு ஆரம்பித்து யாகத்தைக் குறைவின்றி நிறைவேற்றி பெருமாளை சேவித்து உத்ஸவங்கள் செய்துவைத்தல்.

(நொண்டிச்சிந்து)

அன்புடன் ஆரம்பித்தான்—பிரமனும்
இன்பமுடனே யாகம்செய்ய—
சந்தோஷமாய்பின்னும்—வந்த
துன்பமது நீங்கிடவே அத்திகிரியின்மேல்—சுத்தி
அரியதோர் அலங்கார பந்தலிட்டே—
தோரணம் நாட்டியங்கும்—மிகுந்த
சீரணிவாழை தென்னங்குலை—
பாக்குக்குலையும் கொண்டே—பந்தலை
பலவிதமான பூக்கொண்டே—
முத்திலும்கோலம் செய்தே—மிகவும்
பக்தியுடனே நத்தியவன்—
பாங்குடன் ஆரம்பித்தான்—பலவித
வாத்தியங்களும் முழங்கிடவே—
வேதங்கள் ஓதிடவே—வேதியர்
ஆகமநூல்களைப் பாடிடவே—
சீர்மையோடே முடித்தார்—யாகமும்
யேகமனதாக நடக்கையிலே—
போகவரதனுமே—புண்ணிய
கோடிவிமானமது தன்னிலே—
பீதாம்பரதாரியாய்—விளங்கும்
சங்குசக்ர சதுர்புஜனாய்—
நீலமேகச்யாமளனாய்—நீண்ட
கிரீடதாரியாய் அரையினிலே—
தங்கிய பொன்வடமும்—அழகிய
ஸ்ரீதேவி பூதேவி யாரொடுமே—
சித்திரை ஹஸ்தமதில்—எல்லோரும்
கண்டே களிக்கவே அவதரித்தார்—
பிரமனுமே பணிந்தார்—பன்னிரு
பூஜையுமே அவர் பாங்குடனே—
பத்தியாய் நடத்தினாரே.

85730

## சித்திராபருவப்ரபாவம்.

(சுந்தரமானதேர் மெட்டு)

1 சித்திரைமாத சிறந்த பௌர்ணமி
தினத்திலவிசேடம் வரதன் வைபோகம்
அதிகசல்லாபம்— அதைக் கண்டல்லோ
எல்லோரும் அனுபவிக்க வேணும்

2 ஐயங்குளந்தன்னில் அந்தி வேளைதன்னில்
அந்த வரதன் அதிக கம்பீரமுடன்
சுந்தரசேர்வையுடன்— என்றும் பிரபாவமதையே
கண்டல்லோ தெரியும் விசேடம்

3 அந்திவேளையிலே அங்குமே போடுவார்
பலவிதவாணம் அதிக ஆனந்தமாய்த்தோணும்
பார்க்ககண்பலவேவேணும்—பாரினில் பிறந்த
ஒவ்வொருவரும் பார்க்கவே வேணும்

4 அப்புறம் வரதன் நடபா வியினில்
அன்புடன் எள்ளியே பத்தி உலாவியே
பண்புடன் வெளியே— அதிசீக்கிரமாய் செல்வார்
சீர்மிகுந்து தோணும் ஊரலை நோக்கியே

5 அங்குமேநடக்கும் அருளாள னுக்கும்
அதிககோரம் சோடச உபசாரம்
சிரமம் எல்லாம் தீரும்— ஆனந்தம் ஆனந்தம்
அன்பரே எல்லோரும் கண்டே களிதீரும்.

6 பாலாறுதன்னிலே அன்று தோன்றுமே
பண்பான நகரம் இரவின் மேலானலங்காரம்
பார்க்க மிகவும் கம்பீரம்— அன்றே வரதன்வைபவம்
பரமபதமோ என்றுமே தோன்றும் (சித்)

---



## பிரம்ம உற்சவப்ரபாவம்

(பாளவாய் காமுகில்வந்து காவடிச்சிந்து மெட்டு)

1 வைசாக மாதந்தன்னிலே வரதன்வைபவமதையே
வையகத்தில் சொல்ல நம்மால் ஆகுமோ—ஆதி
சேடனும் அதைச்சொல்லவேவே ணுமே

முதல் திருநாள்.

2 சித்திரை நட்சத்ரமதில் சிறப்பாய் கொடி ஏறியே
செல்குவார் காலைஸ்வர்ண சப்ரமதில்—வரதன்
கங்கைகொண்டான் மண்டபம் வரைதன்னில்.

3 மாலையில் பொன்மயமான சிங்கமதின்மேலேறியே
கோலாகாலமாகவே வருகுவார்—எங்கும்
தேவலோகாலங்காரம் செய்குவார்.

2 திருநாள்.

4 மறுநாட் காலைதன்னிலே மேலான அன்ன மீதிலே
மேன்மையாக வரதனும் வருவார்—இரவில்
பொன்மய சூர்யப்பிரபையில் தோன்றுவார்.

3 திருநாள் கருடசேர்வை ப்ரபாவம்.

5 மூன்று நாள் வரதனுமே வைபவ கருடன் மீதே
சீரார் சடகோபன் எதிரே தோன்றியே—மாலை
சடகோபம் மரியாதை தருவார்.

6 முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சியினில்
மூன்றும் நாள் உத்ஸவமதே மேன்மையாம்—வரதன்
கருடன்மீதில் வருவதேசிர்மையாம்—அதை

7 காணக்கண்ணாயிரம்வேணும் கார்முகில் வண்ணனை—அன்றே
கலியுக மனிதரே நீர் காணுமே—காலை
கருடசேர்வையின் மகிமையை தானுமே.

8 மாலையில் அனுமான்மீதில் மகிமையுள்ள வரதனுமே
நீலராமன் வடிவமுடன் தோன்றுவார்—நல்ல
சீலர்க்கே அருள்புரிந்தே செல்குவார்.

4–திருநாள்.

(பாங்கியுடன் கூடி பூங்கோதை மெட்டு)

1 பாங்குடனே நீயே பாராய் வரதன் சேர்வை
பெண்ணே பாராய் வரதன் சேர்வை.

2 நான்காம் தினம் காலை நாரணன் தான்போலே
நாகவாகனந்தனிலே ஆ ஆ (பாங்)

3 ச்வேதாம்பரதரன் சந்திரப்ரபைதரன்
அன்றே இரவு தன்னிலே ஆ ஆ (பாங்)

5–திருநாள்

4 ஐந்தாம் தினமதில் சுந்தரவரதன் தான்
பொன்னும் பல்லக்கு தன்னிலே ஆ ஆ (பாங்)
மோகனவதாரம் மிகவும் கம்பீரம்
மானே சேவி சீக்கிரம் ஆ ஆ (பாங்)

6 அன்றிரவு தன்னிலேயாளியின் மீதினிலே
அன்பாய் சேவிப்பாயடி ஆ ஆ (பாங்)

6–திருநாள்.

7 ஆறாந்தினமதில் அற்புத சப்ரமதில்
ஆனந்தக்குழலூதியே ஆ ஆ (பாங்)

8 காணக்கண்ணாயிரமே கட்டாயம் வேணுமே
வேணுகானக்கண்ணனை ஆ ஆ (பாங்)

9 ஆனைவாகனமாம் அதிகப்ரபாவமாம்
அன்று இரவு தன்னிலே ஆ ஆ (பாங்)
யானையின் மீதினிலே ஏசலாடுகிறாரே
ஏகாம்பரன் எதிரே ஆ ஆ (பாங்)

7–திருநாள்—திருத்தேர் உற்சவம்.

(மலடி வயிற்று மகன்போலே மெட்டு)

1 ஏழாந்தினமது தன்னிலே, கேளாய் மாதே சொல்லுகிறேன்
வரதன்வைபவந்தன்னையே அடிமாதே.

2 பாராய் பெரியதோர் தேரதிலே, சீராய் வரதன் சேர்வையதே
தீராய் உனது பாவமதே அடி கோதே

3 பலநாள் ஆகுதே போவதற்கே, அலங்காரந்தம் மீளுதற்கே
நிலையை நாடியே சேருதற்கே அடி மானே.



4 பல்லாயிரஜனமும் கூடி, பண்பாய் வடமதை நாடி
அன்பாய் இழுக்கவே ஓடி வருமடி.

5 ரதந்தனில் வரதனைகண்டவர்க்கும் பரமபதந்தனில்
உண்டவர்க்கும்
பரமனும் இடமும் கொண்டவர்க்கும் அருள்வாரே.

எட்டாம் உற்சவம்.

(ஆறுமுக வடிவேலவனே மெட்டு)

மறப்பாரோ இவ்வுலகினில்—வரதன் மறுதின உற்சவத்தில்
திருப்பாதம் சூழன்முடித்திருமஞ்சன மதின் திவ்யமதை
வைசாக உத்ஸவத்தின் வேதகோஷ்டிகளின் வைபவமதைக்கண்டால்
வேதங்கள் முன்னம் பின்னுமாய் ஓதிட ஊசலாடும் வரதன்
எட்டாந்தினமதில் கிட்டினால் வரதனை பட்டகுதிரையின்மேல்
கூட்ட நடுவினில் சேட்டமதாகவே சேவை தந்திடுவார் [மேல்
சாட்டை சேணத்துடன்சுட்டியதும் கொண்டேஓட்ட குதிரையின்-
மேட்டிமையாகவே தாட்டியாய்வரதன் நாட்டும் வழிதன்னிலே
கூட்டமதாகவே ஈட்டியுடனே சிரோட்ட கவியனுமே
தீவட்டியுடனே மாவட்டிபோலவே மறித்திட வழியிலே
பந்தம்பறி பாடுவேட்டை உற்சவமும் பார்க்கக்கண்ணாயிரமே
பண்புடனே வேணும்பாரினில் உள்ளோரே பார்த்திட தெரியுமே
அன்றுமே வரதன் இன்பமதாய்சென்று ஏகாம்பரன் எதிரே
பண்புடன் ஏசலாடும் திறமதால் தெரியுமே மேன்மையதே.

தன்யாசி

1 ஆஹாஹா அவர்பெருமை
என்னவென்று சொல்வேன்—பூவுலகந்தன்னிலே.

2 ஆளும் பல்லக்கினிலே—
நாளும் ஒன்பதாம் காலை—
எள்ளும் வைபவமதை
கேளும் சொல்லுகிறேன் (ஆஹா)

3 அன்புடன் வரதனும்
பண்புடன் போர்வைதானும்
தென்புடன் சாத்திக்கொண்டே
இன்புடன் ஏள்ளுவதே (ஆஹா)

4 மேன்மையாய் கங்கைகொண்டான்
மண்டப வாயினிலே
சீர்மையாய் போர்வைதானே
களைந்திடும் நேர்மைதானே (ஆஹா)

5 போர்வை களைந்த பின்னே
சீர்மை கோயிலில் தானே
சேர்ந்த பிரணவ கல
சமது ஆகும் பின்னே (ஆஹா)

6 தீர்த்தவாரிதானே
கீர்த்தியானது தானே
தீராப்பாவமும் தானே
தீருமே அன்றுதானே (ஆஹா)

O-185N83,5 N33

7 அன்று இரவினிலே
ஸ்வர்ணவிமானத்திலே
சென்று வரதனுமே
சேர்வை தந்திடுவானே (ஆஹா)

(காணுவாயோக் கண்ணனே மெட்டு)

1 பத்தாம் தினமதிலே சத்தியவரதனே
அத்திகிரியினிலே அபிஷேகமான பின்னே.

2 துவாதசாரதனமாம் திராவிடவேத கீதமாம்
பிராவண்யமா யாகுமாம் பார்க்கவேவேணுமாம்.

3 அத்திவரதன் பின்னும் சத்தாவரணத்திலும்
சத்திவீதிவந்ததும் பத்திக்கொடியிரங்கும்.

4 பேரருளாளனவர் பிரபாவமதை எவர்
சிரணியாய்ச்சொல்பவர் நாரணனை நண்ணுவர்.

85730

## மங்களம்

(நீனாக்ஷக ராமச்சந்திரன்மெட்டு)

ஸத்தியவ்ருத க்ஷேத்திரந்தன்னில் பக்தர்களைக்காக்கவே
அத்தியங்கிரி தன்னிலே அவதரித்தோனே மங்களம்.
ஆதிமூலமென அழைக்க ஆனை தன்னைக்காத்தோனே
அகில [illegible] தன்னையே தீர்த்தோனே ஜய மங்களம்.
அநந்தவராமா [illegible] அடிமைகள் செய்தேமகிழ்
பெருந்தேவி மணவாளனே பேரருளாளனே மங்களம்.
சித்திரை ஹஸ்த மதிலே அவதரித்தோன்கதை
பத்தியுடன் பாஷ்யமும் பாடினனே இதை
நித்தியமும் பாடியே நாளும் பக்தியாய்ப்பணிந்தோர்க்கும்
அத்தியங்கிரி யருளிக்கும் நித்திய ஜய மங்களம். (ஸத்தி)
மங்களம். மங்களம். மங்களம்.

[library stamp]